உ

கடவுள் துணை.

தோட்டிக்கலை

# ஸ்ரீசுப்பிரமணியமுனிவர்

இயற்றிய

# கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை.

[இரண்டாம்பதிப்பு].

இது

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்

"செந்தமிழ்"ப் பத்திராசிரியராயிருந்த

இராமநாதபுரம்

மு. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பெற்றது.

செந்தமிழ்ப்பிரசுரம்—௨௫.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1929.

ஸ்ரீ:

# முகவுரை.

இந்நூல், தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணியமுனிவரால் இயற்றப் பெற்றது. இம்முனிவர், இற்றைக்கு ககடு-வருஷங்கட்குமுன்பு விளங்கியவரென்பதும், திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சிவஞான யோகிகளுடைய அருமைமாணாக்கர் பன்னிருவருள் ஒருவரென்பதும், அமிர்தவாக்மி என்பதும் பலரும் நன்கறிந்தவை. இம்முனிவர்வரலாறு, மஹாமஹோபாத்யாயர்: ப்ரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்களால், திருவாவடுதுறைக்கோவைப்பதிப்பில், பிரபல ஆராய்ச்சியோடும் விளக்கப்பட்டுள்ளது. இது நிற்க, இம்முனிவர் இயற்றிய பிரபந்தத்திரட்டு என்னும் அரியபிரதியொன்று, நம் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையில் உள்ளது. இச்சங்கத்து அக்கிராசனாதிபதியும் தமிழருமையறிந்த வள்ளலுமாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்களால் பெரிதும் அருமைபாராட்டி அளிக்கப்பெற்ற ஏடுகளில் இஃதொன்று. இப்பிரபந்தத்திரட்டில், பல சிறிய நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள், தொட்டிக்கலையிற் றிருக்கோயில்கொண்டுள்ள கேசவப்பெருமாள்விஷயமாக, இரட்டைமணிமாலை, வர்ணங்கள், ஆசிரியவிருத்தம், விருத்தம், உலா, தாய்மகள் விளுதல், கலிவிருத்த அந்தாதி, கொச்சகக்கலிப்பா என்பவைகளும், ஷையூர்ப் பெருந்தேவித்தாயார்விஷயமாக ஆசிரியவிருத்தம், ஊசல் என்பவைகளும் இம்முனிவரியற்றியனவாக உள்ளன. இதனால், சைவசமயப்பெரியாரில் ஒருவராகிய இம்முனிவர் திருமால்பத்தியும் சிறக்கவுடையர் என்பது நன்குவெளியாம். உண்மைப் பெரியோரெல்லாம் இங்ஙனம் இருத்தல் இயல்பன்றோ! ஷை பிரபந்தங்களுள் இரட்டைமணிமாலையைத் தமிழகமறிந்து ஆனந்திக்குமாறு, இப்போது, "செந்தமிழ்"வாயிலாக வெளியிடத்துணிந்தேன். இதன் சொற்பொருணோக்கங்களின்சிறப்பு அறிஞர்க்குப் பெருமகிழ்வளிக்குமென்பது திண்ணம். ஆயினும், ஏனையரும் அவற்றை அறியவேண்டி, அவ்வப்பாடலின் அரும்பதம் விசேடமுதலியவற்றை, என்னறிவிற் கேற்பக் கீழ்க்குறிப்பில்வைத்து விளக்க முயன்றிருக்கிறேன். இம்முனிவர் இயற்றிய பிரபந்தங்களில் வெளிவாராதனவற்றை, இவ்வாறே, உரியகாலத்தில் வெளியிட்டுவரவும் எண்ணமுடையேன்.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்,

"செந்தமிழ்"ப் பத்திராசிரியர்.

ஸ்ரீ:

## திருத்தோட்டிக்கலைக்
## கேசவப்பெருமாள்
# இரட்டைமணிமாலை.

———:(o):———

## காப்பு.

### வெண்பா.

*மான்மேவுந் தண்டலைசூழ் வண்ணத் திருக்கலைசை*
*மான்மே விரட்டைமணி மாலைசொல—மான்மருகன்*
*கந்தனுக்கு முன்னுதித்த கந்தனுக்குஞ் செங்கழுநீர்க்*
*கந்தமதத் தந்திபதம் காப்பு.*

## நூல்.

### வெண்பா.

*நீர்பூத்த கந்தரத்தி னீல வடிவழகர்*
*சீர்பூத்த தென்கலைசைச் சீதரனார்—தார்பூத்த*
*பின்னலகப் பின்னைதன்பூப் பிள்ளையமிர் துண்பதுபோ*
*லென்னைமணந் தார்வந் திரவு.* (க)

### கலித்துறை.

*இருங்கேச வாதிருத் தொட்டிக் கலைநிதி யேமுகிலைப்*
*பொருங்கேச வாசுகம் போலுங்கண் ணனொரு பூவையுன்றன்*
*மருங்கேச வாதணி மார்பேந் தியகுல்லை மாலைக்கிவ்வூ*
*ரொருங்கேச வாசையுற் றுளரு ளாசை யுடையவனே.* (உ)

---

**காப்பு:**—மால்-மேகம். தண்டலை-சோலை. உதித்த, அனுக்கும் என்னும் பெயரெச்சங்கள் தந்தி என்னும பெயர்கொண்டன. பின்னதாகிய கந்தனுக்கும் என்பதைக் கந்து + அனுக்கும் எனப் பிரித்து, கட்டுத்தறியை முறிக்கும் எனப் பொருள் கொள்க.

க. கந்தரம்-மேகம். சீதரனர், பின்னிய கூந்தலையுடைய நப்பின்னையின் மணற்சிறுசோற்றை உண்டுகளித்தமைபோல, இரவில் என்னைத் திளைத்தார்; என்றது பிராட்டி சிற்றிலிழைத்துச்சமைத்த சிறுசோற்றைக் கண்ணன் பொய்யே உண்டு விளையாடியதுபோல, என்னைக் கனவிற் பொய்யே கலந்தார் எனத் தலைவி இரங்கியபடி. நப்பின்னை, திருமகள் இருவர்சுகத்தையும் திளைத்தல்போல என்னை மணந்தார் என்பதுமாம.

உ. கேசத்தையுடைய பூவை (பெண்). ஆசுகம்-அம்பு. குல்லை-திருத்துழாய். ஆசையுடையவன்-பீதாம்பரன். ஆசையுடையவன் ஆசையுறறவட்கு அருளல் முறையென வேறுமொருகுறிப்புத் தொனித்தல் காண்க.

### வெண்பா.

உடையாச் செறுந ருயிர்குடிக்கு மாழிப்
படையாண்ட செங்கைப் பரனைப்—புடையார்ந்த
கற்புரிசைத் தென்கலைசைக் கண்மாலைக் கண்டிவளு
மெற்புருக மாலானு ளின்று. (ங)

### கலித்துறை.

இன்னற் பிறப்பறுத் தின்னலங் காட்டு மெழிலரியைக்
கன்னற் கழனிக் கலைசைப் பிரான்றனைக் கைதொழுதோர்
மின்னற் புதழுறுங் கண்ணீர் சொரியும் விதிர்விதிர்க்கு
மென்னற் பொழுதுங் கனவிற்கண் டேனென்னு நெட்டுயிர்த்தே. (ச)

### வெண்பா.

நெட்டிலஞ்சிக் கெண்டைகடாய் நீள்கரைமே லோங்கிநின்ற
மட்டிலஞ்சிப் போதுதிர்க்கு மாவளங்கூர்ந்—திட்டமுறும்
பூங்கலைசைக் கேசவமால் பொன்னடியைச் சென்னிமிசைத்
தாங்கினரே செய்தார் தவம். (ரு)

### கலித்துறை.

தவளை குதிக்கத்தண் டேன்பாய் வயற்கலை சைக்குளிருந்
தவளைக் காதல னேமுல்லை யாய்ச்சியர் தாங்குறிவைத்
தவளை யெடுத்துண்ட செவ்வாய னேயிந்தத் தையனலத்
தவளை கவருதற் கோபருந் தூர்ந்தித தலைவந்ததே. (சா)

### வெண்பா.

தேங்காவி மீதே சிறைவண் டுறங்கியநீர்
தேங்காவி சூழ்கலைசைச் சீதரநொந்—தேங்காவி
யாற்றியபா வத்தைநினை யாயுதமல் லால்வேறு
மாற்றுதற்குக் காணேன் மருந்து. (எ)

---

ங. உடையாச் செறுநர்-வலியால் அழியாத பகைவர். உடைத்து எனக் கொள்ளினுமாம். புரிசை-மதில். மாலைக்கண்டு இவளும் மாலானுள் என ஒருகுறிப்புத் தொனித்தல் காண்க.

ச. கன்னல்-கரும்பு. ஓர்மின்-எழுவாய்.

ரு. இலஞ்சி-பொய்கை. மட்டு + இலஞ்சி=மதுவையுடைய மகிழமாம்.

சா. எதுகைகளை, முறையே, இருந்த + வளை (பாஞ்சசந்நியம்) எனவும், குறிவைத்த + அளை (வெண்ணெய்) எனவும், நலத்த + வளை (மகளிர்கையணி) எனவும் சேர்த்துப் பிரித்துப் பொருள்கொள்க. ஈற்றடியில், பருந்தூர்ந்து வந்தது, தவளைகவர்தற்குப்போலும் என வேறொருகுறிப்புத் தொனித்தல காண்க.

எ. இரண்டாமடியை, நீர் + தேங்கு + ஆவி (பொய்கை) எனவும், நொந்து + ஏங்கு + ஆவி (உயிர்) எனவும் பிரித்துப் பொருள்கூறுக. நின் + ஐயாயுதம்; அவை:—சங்கு, சக்கரம், வாள், தண்டு, சிலை.

### கலித்துறை.

மருந்தே விமானத்தி லேறுஞ் சுரரை வளர்கலைசை
யிருந்தேவி யாளு மிறையவ னேயென் னிடர்தவிர்ப்பாய்
முருந்தே விராவிருள் வெண்மூர லம்பக மொய்குழலாம்
பெருந்தேவி மாதை மணந்துல குண்ட பெருந்தகையே. (அ)

### வெண்பா.

கைவரையைக் காத்துக் கராவைக் கடிந்துகுடங்
கைவரைக்கு ளேழிசையுங் கண்டானே—யைவருக்குத்
தாதாதொட் டிக்கலைசைச் சுந்தரவிப் பைந்தொடிக்குத்
தாதாதொட் டித்துளவத் தார். (௯)

### கலித்துறை.

தாவா தவரும் பொருளேவை குந்தத்திற் றங்குமுகுந்
தாவா தவரு மதியுஞ் செறிபொழிற் றண்கலைசைத்
தாவா தவரும் பருதியுஞ் சங்குந் தரித்தகைப்போ
தாவா தவரு மறியாப் பதத்தைத் தரவெனக்கே. (௧௦)

### வெண்பா.

கேசவா திக்குநிறை கீர்த்தித் திருக்கலைசை
வாசவா திக்குமனை மார்வசையே—பேசவா
காயமதி யோடுமதன் கைக்கருப்பு விற்கணையுங்
காயமதி சோருமின்னைக் கா. (௧௧)

---

அ. (உ, ௩-ம்) அடியெதுகைகளை (சுரரை) இருந்து + ஏவி + ஆளும் எனவும், முருந்து (மயிலிறகடி) + ஏ (அம்பு) + இராவிருள் எனவும் பிரித்து, முருந்துமுதல் மூன்றற்கும் - வெண்மூரல் (பல்), அம்பகம் (கண்), மொய்குழல்களை நிரனிறையாகக்கொண்டு பொருள் கூறுக. பெருந்தேவி—பிராட்டி திருநாமம்.

௯. கைவரை — கஜேந்திரன். கரா - முதலை. குடங்கைவரை - உள்ளங்கையிற்கொண்ட வேய்ங்குழல். தா + தாது + ஒட்டு + இத்துளவத்தார் எனப் பிரிக்க. தார் தா என இயையும்.

௧௦, எதுகைகளை, முறையே, தாவாத (கெடாத) + அரும்: எனவும், முகுந்தா + ஆதவரும் (சூரியனும்) எனவும், தாவா (இடத்திலுள்ளவனே) + தவரும (வில்லும்) எனவும், கைப்போதா + வா + தவரும் (தவசிகளும்) எனவும் கூட்டிப் பிரித்துப் பொருள்படுத்துக. மூன்றாமடியில் தாவு உறைவிடம். எனக்குத் தர வா என இயையும்.

௧௧. (கலைசை) வாச + வாதிக்கும் (துன்புறுத்தும்) + அனைமார் எனப் பிரிக்க. வசைபேசலாலும், மதியும கணையும் காய்தலாலும் மதிசோரும் மின் (பெண்) என்க. மதிசோர்தல் - அறிவழிதல். தோழி இரங்கிக்கூறியது.

### கலித்துறை.

காயா மலரை நிகர்வண்ண னேதென் கலைசையில்வாழ்
மாயா மலரை யுடுக்கும்பொன் னம்பர மன்னவுன்னை
யோயா மலரை யிரவிலுஞ் சிந்தித் தொருத்திசொல்லுங்
தீயா மலரையுற் றுடன மேற்றனந் தேடிக்கொண்டே. (கஉ)

### வெண்பா.

கொண்டலே யொக்குங் குளிர்வடிவாற் றன்னகலங்
கண்டவெழின் மின்னாற் கவுத்துவத்தின்—விண்டகதி
ரண்டுதுழா யிந்திரவில் லாலதுபெய் தேன்மழையான்
மண்டுபுகழ்த் தென்கலைசை மால். (கங)

### கலித்துறை.

மாலைவிட் டோம்வன மாலையைப் பெற்றபின் வன்பிறவி
வேலைவிட் டோமுன்றன் வேலையைச் செய்தபின் வெய்யவிழிக்
காலைவிட் டோமுன்பொற் காலைத் தொழுதபின் காதிலிட்ட
ஓலைமட் டோடுங்கண் ணூர்வாழ்தொட் டிக்கலை யுத்தமனே. (கச)

### வெண்பா.

மனவா சகங்கடந்த வாரீசன் றாதாய்
மனவா சகங்கடந்த வாழ்வே—யினியடியேன்
காந்தளறு சேராமற் காத்தருள்வாய் தென்கலைசைப்
பாந்தளணை யானே பரிந்து. (கரு)

---

கஉ. இரண்டாமடியில், மல் + அரை = வளப்பமுற்ற இடையெனக் கொள்க; அதிலுடுக்கும் பீதாம்பரத்தையுடைய அரசனே. அரையிரவு - நடுச் சாமம். தீயாம் + அலர் = கெட்டபழிச்சொல். ஒருத்தி உற்றுளென இயையும். பின்வரும் தனம் - பொன் : பசலை என்றபடி.

கங. தென்கலைசைத்திருமால் — வடிவாலும், மின்னாலும், இந்திரவில்லாலும், மழையாலும், கொண்டலேபோல்வர். அகலம் - திருமார்பு. ஒருபொருளில, எழில் மின் - இலக்குமி; இந்திரவில் - உயர்ந்த ஒளி என்க. கௌஸ்துப மணியின் விரிந்த பலகிரணங்கள் படுதலால், திருத்துழாய் இந்திரவில்போன்றதென்பது கருத்து. மால் ஒக்கும் என முடியும். மால் என்பது மேகத்துக்கும் பெயராதலின், அம்மால் (மேகம) வடிவு, மின் முதலியவற்றால் மேகம்போன்றது என வேறொருநயம் பெறப்படுதலும் காண்க.

கச. மால் - மயக்கம். வனமாலை - துளவமாலை. முதல் வேலை கடல். பின் வேலை கைங்கரியம். வெய்யவிழிக் காலை - தறுகண்மையுடைய யமனை; ஓலை - மகளிர்காதணி. மட்டு - எல்லை: உம்மை தொக்கது.

கரு. முதலடியை ம (ன்) னவா + சகங்கள் + தந்த + வாரீசன் (பிரமன்) எனப் பிரிக்க. வாரீசம் - தாமரை. காந்து + அளறு - எரிவாய்நிரயம். பாந்தள் - ஆதிசேடன்.

### கலித்துறை.

துரங்கத்தி ஞர்ப்புறுந் தொட்டிக் கலைமது சூதனனே
தரங்கக் கடற்கு ளிலங்கா புரியினிற் றங்குமாக்
காங்கத்தைப் பேயுங் கழுகுந் தினக்கொன்று கான்மரத்து
மரங்கத் தினும்பள்ளி கொள்ளும் பிரானுன் னடைக்கலமே. (கசு)

### வெண்பா.

அடுபடைவா ணன்சிரமீ ரைஞ்ஞூறு நேமிப்
படைதொட் டறுத்தருள்கோ பாலா—கொடிதெனைச்செ
யிச்சுதனைப் பெற்ற திசையலவே தென்கலைசை
யச்சுதனே பூமணவா ளா. (கஎ)

### கலித்துறை.

மணங்கொண்ட சோலைக் கலசா புரியின் மணிவண்ணனே
பணங்கொண்ட பன்னகப் பாயலைப் போற்பகு வாயரக்கர்
ணிணங்கொண்ட வாழிப் படையுடை யாயிந்த நேரிழைதன்
குணங்கொண்ட கொங்கைக் குவட்டிலு நீபள்ளி கொண்டருளே. (கஅ)

### வெண்பா.

அருந்தமிழ்தேர் தென்கலைசை யாண்டகையே யும்பர்க்
கருந்தமிழ்தே ராயளித்த வையா—வரைந்தெவரு
நாட்டினகை யாதெனையா ணல்வரையை மத்தாக
நாட்டினகை யாமுகில்வண் ணா. (கக)

### கலித்துறை.

நானங் கமழுங் குழலணங் கேங்கி யாதிருமோ
வானவில் லோடு முருமோடு மேகம் வருமுன்னமே
யானவில் லேந்திவெண் சங்கத் தொலிசெய் தருட்கலைசை
நீனிறத் தங்க முகில்வருங் காணன்பு நீருண்ணவே. (உ0)

### முற்றும்.

---

கசு. துரங்கத்திஞர்ப்பு-குதிரைகளின்ஒலி. தரங்கம்-அலை. அரக்கர் + அங்கத்தை. கான்மரம்-ஆலமரம். அரங்கம்-ஆற்றிடைக் குறையான ஸ்ரீரங்கம் என்னுந் திருப்பதி.

கஎ. என்னைக் கொடுமைசெய்கின்ற நின்மகன்: என்றது, திருமால் புத்திரனான மன்மதனைக் குறித்தபடி.

கஅ. பணம்-படம். பன்னகம்-ஆதிசேடன். ணிணம்-கொழுப்பு. குணங் கொண்ட - குடத்தின் றன்மைகொண்ட.

கக. அருந்து + அமிழ்து + ஏராயளித்த எனவும், நாட்டில் + நகையாது எனவும், நாட்டின + கையா எனவும் எதுகைகளைப் பிரித்துப் பொருள்கொள்க. வரைந்து-தள்ளி.

உ0. நானம்-கஸ்தூரி. மோ-மூன்னிலையசை. உரும்-இடி. 'கார்ப்பருவம் வருவதற்குமுன்பே திருமால் நின்னையணையவருவன்; வருந்தற்க' எனத் தோழி தலைவியைத் தேற்றியவாறு.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| | **சங்கப்பிரசுரம்.** | | | |
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் (விசாகப்பெருமாளையர் பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை) ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... | 5 | 0 | 0 |
| *5. | பன்னூற்றிரட்டு ... ... | | | |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... | | | |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் ... (நச்சினார்க்கினியருரை உரையாசிரியருரையுடன்) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| * | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |
| | **செந்தமிழ்ப்பிரசுரம்.** | | | |
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | கணநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| *3. | வளையாபதிச்செய்யுட்கள் ... | | | |
| 4. | புலவராற்றுப்படை (திருக்குருகூர் இரத்தின கவிராயர் இயற்றியது.) ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... | | | |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11.* | விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம் | | | |
| 12.* | பன்னிருபாட்டியல் ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) | | | |
| 23.* | விக்கிரமசோழனுலா ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திர நூறுபாட்டுக்குரை ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழிமூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |

## வேறுபதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வஞ்சிமாநகர் ... ... ... | 0 | 8 | 0 |
| 2. | ஜோதிமாலை (தமிழ்நாவல்) ... ... | 0 | 4 | 0 |
| 3. | சிவஞானசுவாமிகள்மீது இரட்டைமணிமாலை ... | 0 | 1 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்ப்" பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 26 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்பு, செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லெக்ஷ்மீநாராயணையா, மானேஜர்.